# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம்

---

*[2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, சனவரி மாதம் 26 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2024 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம்

[2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ. ஓ 8/2023

### (70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

70 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தல் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றது :-

(1) அப்பிரிவை, (1) ஆம் உட்பிரிவாக மீள் இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அதன் மீள் இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில்-

(அ) பந்தி (அ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(அ) இயைபான உறுதி அல்லது சாதனம் எழுத்திலிருந்தாலொழியவும், அதேநேரத்தில் சமுகமாயிருக்கும் ஓர் உரிமம்பெற்ற பிரசித்த நொத்தாரிசுவினதும் ஒவ்வொருவரினதும் சமுகத்திலும், ஒவ்வோர் உறுதிமுடிப்பவரினாலும் அல்லது அத்தகைய உறுதிமுடிப்பவரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினாலும் சாட்சிகளினாலும் கையொப்பமிடப்பட்டாலொழியவும், அது அத்தகைய நொத்தாரிசுவினால் அத்தாட்சிப்படுத்தப் பட்டாலொழியவும்; அத்துடன்”

(ஆ) பந்தி (ஆ) வில், ''இயைபான உறுதியில் அல்லது சாதனத்தில் இடப்பட்டிருந்தா லொழியவும்:'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய பிரசித்த நொத்தாரிசு வினதும் சாட்சிகளினதும் சமுகத்தில், இயைபான உறுதியில் அல்லது சாதனத் தில் இடப்பட்டிருந்தாலொழியவும் :'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும்:-

''(2) கைமாற்றல் உறுதியொன்று தொடர்பில் -

(அ) கைமாற்றுநர் மற்றும் கைமாற்றம் பெறுநர் ஆகிய இருவரும் (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக அவர்க ளின் கையொப்பங்களையும் பெருவிர லடையாளங்களையும் இடுதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், கைமாற்றம் பெறுநர் சமுகமளிப்பதற்கும் மற்றும் உறுதியை அல்லது சாதனத்தை நிறை வேற்றுவதற்கும் இயலாதவராக இருக் கின்றவிடத்து, அவர், அத்தகைய உறுதி யில் அல்லது சாதனத்தில் அவர் சார்பில் கையொப்பமிடுவதற்கென வேறெவரே னும் ஆளுக்கு எழுத்தில் அதிகார மளித்தல் வேண்டும்; அவ்வாள் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட தேவைப்பாடு களுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்:

ஆயின் மேலும், கைமாற்றம் பெறுநர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்

பாளர் சபை சமுகமளிப்பதற்கும் மற்றும் உறுதியை அல்லது சாதனத்தை நிறை வேற்றுவதற்கும் இயலாததாக இருக் கின்றவிடத்தும், அத்தகைய சபையானது, அத்தகைய உறுதியில் அல்லது சாதனத் தில் அதன் சார்பில் கையொப்ப மிடுவதற்கென வேறெவரேனும் ஆளுக்கு எழுத்தில் அதிகாரமளித்தல் வேண்டும்; அவ்வாள் (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகு தல் வேண்டும்.

(ஆ) கைமாற்றம் பெறுநர் பராயமடையாத வொருவராக இருப்பின், பாதுகாவலர் இப்பிரிவின் நோக்கத்துக்காக கைமாற்றம் பெறுநர் சார்பில் செயலாற்றுவதற்குத் தகுதிவாய்ந்த ஆளொருவராக இருத்தல் வேண்டும்.”.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*